# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 267/மா/2023**

**நாள்: 02.11.2023**

திரு. S.S. ஜெகதீஷ்,
மதுரை - 625 001. – முறையீட்டு மனுதாரர்
உதவி ஆணையர்,
மண்டலம்-4, மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், மஹால் 8வது தெரு, 1-Bல் வசிக்கும் திரு. S.S. ஜெகதீஷ் என்பவரின் 24.7.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.07.2023–ல் பெறப்பட்டு 267/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், மஹால் 8வது தெரு, 1-Bல் வசிக்கும் திரு. S.S. ஜெகதீஷ் என்பவரின் 24.7.2023 நாளிட்ட தனது மனுவில் :

"நான் மதுரை மாநகர், மஹால் 8வது தெரு, கதவு எண்.1-B வீட்டில் வசித்து வருகிறேன். நான் விருதுநகர் மாவட்டத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து ஒய்வு பெற்றிருக்கிறேன். நான் வட்டாட்சியராக பணிபுரிந்த காலத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கம் சார்பாக மனிதருள் மாணிக்கம் விருது மற்றும் தமிழ்நாடு அரசு கூட்டுறவு துறை அமைச்சர் அவர்களால் சமூக சிந்தனையாளர் விருது மற்றும் மதுரை மாநகர மேயர் அவர்களால் இனிய பண்பாளர் விருது ஆகியவைகள் வழங்கப்பட்டன என்பதை தங்கள் முன் பணிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வாழ்க்கையில் பெரும்பாலான காலங்கள் பொதுநலன் பணிகளுக்காக செலவழித்திருக்கிறேன். மதுரை மாநகராட்சியில் ஊழல் பெருகிவிட்டது என்பதற்காக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீட்டு வழக்கு நீதிப்பேராணை எண்.978/2019 தொடர்ந்து அதில் 20.09.2019 நாளிட்ட தீர்ப்பின் பிரகாரம் எந்த நடவடிக்கையும் மாநகராட்சி மேற்கொள்ளவில்லை.

மதுரை மாநகராட்சி பழைய மண்டலம் எண்.3 புதிய மண்டலம்–4 உதவி ஆணையாளர் அவர்களால் அனுப்பிய கடிதம் எண்.ம3எ2/09114/18, நாள்: 26.12.2018 மற்றும் 06.09.2019 ஆகிய கடிதங்களில் கண்டுள்ள புதிய கட்டிடங்கள், கூடுதல் கட்டிடங்கள் மாறுதல் கட்டிடங்கள் கட்டப்பட்ட 31 கட்டிடங்களுக்கும் சிறப்பினமாக கருதி மறு அளவீடு நடவடிக்கையும் மாநகராட்சி உதவி ஆணையாளரால் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் 01.10.2017 முதல் சுயநிதி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், மண்டலம் எண்.4ன் பகுதியில் தெற்கு

பெருமாள் மேஸ்திரி வீதியில் இருக்கும் ராஜன் மழலையர் மற்றும் ஆரம்பப் பள்ளி கூடத்திற்கும், மாரியம்மன் தெப்பக்குளம் அருகிலுள்ள நடனகோபால நாயகி மந்திர் கட்டிடத்திற்குள் இயங்கும் நடனகோபால நாயகி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி கட்டிடத்திற்கும் இன்றுவரை வரிவிதிப்பு செய்யப்படவில்லை

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2, "வாழ்க வரியாளர்" சிறப்பு குறைதீர் முகாமில் வார்டு எண்.32, தேவர் நகர், அண்ணாநகர், கதவு எண்.937 மனையில் கட்டப்பட்டிருக்கும் 4 மாடி கட்டித்திற்கு வரிவிதிப்பு செய்து கொடுக்கும்படி P.K. பிரேம்நாத் அவர்களால் 14.07.2021ல் மனு சமர்ப்பித்தும், இன்றுவரை வரிவிதிப்பு செய்யவில்லை. என்னால், மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு 19.11.2022ல் பதிவுத்தபாலில் அனுப்பிய மனுவின் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆயிரக்கணக்கிலும், இலட்சக்கணக்கிலும் லஞ்சம் கொடுத்தால் மட்டுமே மாநகராட்சியில் வேலை நடைபெறுகிறது. மனுவில் கூறப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்யாமலிருப்பதற்கு காரணம் லஞ்சம் கொடுக்கவில்லை என்பதற்காகதான் என்பது தெரிகிறது. ஆகவே, மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தகுந்த உத்தரவுகள் பிறப்பிப்பதன் மூலம் மாநகராட்சிக்கு பலகோடி ரூபாய் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆகவே, மேன்மை தங்கிய நடுவர் அவர்கள் மனுவை விசாரணை செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 மற்றும் 4 உதவி ஆணையர்களிடம் 19.9.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலர் 6.10.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:**

<u>ராஜன் மழலையர் மற்றும் ஆரம்பப்பள்ளி கூடம்:</u>

இப்பள்ளிக்கு வரிவிதிப்பு எண்.115/053/900119 பழைய வரிவிதிப்பு எண்.115/75855. இராஜன் மழலையர் தொடக்கப்பள்ளி கல்வி நிறுவனத்திற்கு 01.04.1994ல் school exempted என சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது என்றும் பின்னர் MCMC Act 1971பிரிவு 112C-ன்படி சட்டத்திருத்தம் செய்யப்பட்டு சுயநிதி கல்வி நிறுவனத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு 2006-2007 முதல் அரையாண்டு முதல் கணினியில் பதிவேற்றம் செய்ய அரசுக்கு பிரேரணை மின் அஞ்சல் மூலமாக 06.07.2023 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் மேற்படி வரி விதிப்பிற்கு கணினியில் மீள பதிவேற்றம் செய்து கேட்புத்தொகையை வசூல் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

<u>கீதா நடனகோபால நாயகி மெட்ரிக்குலேசன் கல்வி நிறுவனம்:</u>

இப்பள்ளி 01.4.2022 முதல் வார்டு மறுவரையறை செய்ததின் அடிப்படையில் பழைய வார்டு 52ல் இருந்து தற்போது வார்டு எண் 42 என மாற்றம் செய்யப்பட்டது என்றும், இக்கல்வி நிறுவனம் வரிவிதிப்பு செய்யக்கோரி ஆவணம், அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல் போன்ற ஆவணங்களை நாளது தேதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், இதனைத் தொடர்ந்து மதுரை மாநகராட்சி நியமன அலுவலர் மூலம் நியமனம் செய்யப்பட்ட வார்டு வருவாய் உதவியாளர் களபணி மேற்கொண்ட நிலையில் கீதா நடனகோபால நாயகி மந்திர் என்ற வழிபாட்டுத்தலம் வரிவசூல் நடவடிக்கை மேற்கொண்டபோது மேற்படி வழிபாட்டுத்தலம் வரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது என்ற இவ்வலுவலக உத்திரவினை சமர்ப்பிக்கப்பட்டது எனவும், அதனை தொடர்ந்து மேற்படி வளாகத்தில் அமைந்துள்ள கீதா நடனகோபால நாயகி மெட்ரிக்குலேசன் கல்வி நிறுவனம் செயல்பட்டு வந்ததற்கு வரிவிதிப்பு நடவடிக்கை

மேற்கொள்ளப்படவில்லை என சம்மந்தப்பட்ட சுவான்தார் தெரிவித்ததை தொடர்ந்து MCMC Act 1971 பிரிவு 122Cன்படி சட்டத்திருத்தம் செய்யப்பட்டு சுயநிதி கல்வி நிறுவனத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மேற்படி கல்வி நிறுவனம் கட்டிடத்திற்கு பின்வருமாறு அளவீடு செய்யப்பட்டது எனவும்;

| | | |
|---|---|---|
| தரைதளம் | 140x30.6 | = 4284 ச.அடி |
| தரைதளம் | 82.6x 33.6 | = 2764 ச.அடி |
| தரைதளம் | 24.6x 40 | = 980 ச.அடி |
| முதல் தளம் | 140 x30.6 | = 4284 ச.அடி |
| முதல் தளம் | 82.6x 33.6 | = 2764 ச.அடி |
| இரண்டாம் தளம் | 140x 30.6 | = 4284 ச.அடி |
| இரண்டாம் தளம் | 82.6 x33.6 | = 2764 ச.அடி |

ஆக மொத்தம் 22124 சதுர.அடி மேற்படி அளவீடுகளின் அடிப்படையில் வரிவிதிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வார்டு வருவாய் உதவியாளர்/உதவி வருவாய் அலுவலர்/ மண்டல உதவி ஆணையர்/ உதவி ஆணையாளர் (வருவாய்) / துணை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று சொத்துவரி கணக்கீடு செய்து உரிய கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய கேட்பு தொகையை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

<u>அண்ணா நகர் கதவு எண். 937 மனையில் கட்டப்பட்ட 4 மாடி கட்டடம்</u>

மேற்கண்ட கட்டடத்தில் உள்ள சுவான்தாரர்களுக்கு மதுரை மாநகராட்சி மூலம் ஆகஸ்ட் 2023ல் மதுரை மாநகராட்சி சட்டம் 1971ல் தெரிவித்துள்ள பிரிவுகளின் அடிப்படையில் மாறுதல்/கட்டிடம் கூடுதல் கட்டிடம் மேற்கொண்ட நிலை குறித்து தொடர்புடைய சுவான்தாரர்களிடம் பாத்தியம் குறித்த ஆவணம் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல், உரிய வரிவிதிப்பு ரசீது நகல் சமர்ப்பிக்குமாறு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு பல்வேறு தேதிகளில் ஒப்புகை பெறப்பட்டுள்ளது எனவும், 4 சுவான்தாரர்கள் வீடு தொடந்து பூட்டப்பட்ட நிலையில் உள்ளதாகவும், இந்நிலையில் வரிவதிப்பு எண்.115/47/901522 மனுதாரரின் வாரிசான திருமதி S.J. கீதாரமணி என்பவருக்கும் மேற்படி அறிவிப்பு வழங்கப்பட்டது. இதற்கு ஆட்சேபணை செய்து மனுதாரரால் அதிகார அமைப்பிற்கு முறையீட்டு கடிதம் சமர்ப்பித்துள்ளார் எனவும் மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் எவ்விதமான ஆவணம், வரைபடம், நகல்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டிடமாக கருதி உரிய கேட்பு நிர்ணயம் செய்து அறிவிக்கை தொடர்புடைய சுவான்தாரர்களுக்கு சார்வு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 27.10.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 18.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 27.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.**

**மதுரை மாநகராட்சி, உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி உதவியாளர் 27.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள 31 கட்டடங்கள் அளக்கப்பட்டது. 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மேற்கண்ட கட்டடங்களில் 4 கட்டடங்கள் மட்டும் விரிவாக்கம் செய்து கட்டப்பட்டுள்ளது தெரியவந்தது. விரிவாக்கம் செய்து

கட்டப்பட்ட கட்டடத்திற்கான கூடுதல் சொத்து வரி மாநகராட்சியால் வசூலிக்க 22.10.2023 அன்று கேட்பு அறிவிப்பு சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியில் வார்டுகள் மறுவரையறை பணியின்போது சில வரிவிதிப்பு எண்கள் "in active" நிலைக்கு சென்றுள்ளதால், அத்தகைய வரி விதிப்புகளுக்கான கட்டடங்களுக்கான சொத்து வரி மாநகராட்சியால் வசூல் செய்ய இயலவில்லை. மேற்கண்ட கணிப்பொறி கோளாறை சரி செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலர்கள் மூலம் மதுரை மாநகராட்சியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் மதுரை மாநகராட்சி மண்டலம் 4ல் அமைந்துள்ள இராஜன் மழலையர் தொடக்கப்பள்ளி நிறுவனத்திற்கும், கீதா நடனகோபால நாயகி மந்திருக்குள் அமைந்துள்ள நடனகோபால நாயகி மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கும் வரி செலுத்துவதிலிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. Madurai City Municipal Corporation Act 1971ன் பிரிவுகளின்படி மேற்கண்ட 2 நிறுவனத்திற்கு வரி விதிப்பு செய்யப்படவேண்டும் என்கின்ற அடிப்படையில், மேற்கண்ட கல்வி நிறுவனங்களை அளந்து, வரி விதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் தான் வட்டாட்சியராக பணிபுரிந்து ஓய்வுபெற்றவர் என்றும், மதுரை மாநகராட்சியில் ஊழல் பெருகிவிட்டது என்றும், பணம் பெறாமல் எந்த பணியும் அவர்கள் செய்வதில்லை என்றும், இது குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து அது சார்பாக மாண்பமை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மதிக்கவில்லையெனவும் மதுரையில் 31 கூடுதல் கட்டிடங்கள் மற்றும் மாறுதல் கட்டிடங்கள் மறு அளவீடு செய்யப்படும் என்று தெரிவித்து இதுவரை அதனை செய்யவில்லை எனவும், மதுரை ராஜன் மழலையர் மற்றும் ஆரம்ப பள்ளி கூடத்திற்கும், நடனகோபால நாயகி மந்திர் கட்டிடத்திற்குள் இயங்கும் நடனகோபால நாயகி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்திற்கும், மதுரை அண்ணா நகரில் கட்டப்பட்டிருக்கும் 4 மாடி கட்டிடத்திற்கும் இன்றுவரை வரி விதிக்கவில்லையெனவும் தெரிவித்து தன் மனுவினை பரிசீலனை செய்து மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உரிய உத்திரவுகளை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட, 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட, 31 கட்டடங்கள் அளவீடு செய்யப்பட்டது என்பதும், அதில் 4 கட்டடங்கள் மட்டும் விரிவாக்கம் செய்து கட்டப்பட்ட கட்டடங்கள் என்பதும் அந்த 4 கட்டட உரிமையாளர்களுக்கு 22.10.2023 அன்று கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், மதுரை மாநகராட்சியில் வார்டுகள் மறுவரையறையின்போது சில வரிவிதிப்பு எண்கள் inactive நிலைக்கு சென்றதால், அத்தகைய கட்டடங்களுக்கான வரிவிதிப்பு சொத்துவரி மாநகராட்சியால் வசூல் செய்ய இயலவில்லை என்பதும், கணிப்பொறியில் ஏற்பட்ட கோளாறை சரிசெய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலர்கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்த இராஜன் மழலையர் தொடக்கப்பள்ளி நிறுவனத்திற்கும், நடனகோபால நாயகி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கும் Madurai City Municipal Corporation Act 1971ன் பிரிவுகளின்படி வரி விதிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

என்பதும் மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது.

மனுதாரர் 2018 ஆண்டு முதல் மதுரையில் கட்டப்படும் கட்டடங்கள் முறையாக அளவீடு செய்யாமலும், வரிவிதிக்காமல் இருப்பதை சுட்டிக்காட்டி மனுக்கள் அளித்தும், இராஜன் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியால் 01.03.2023 மற்றும் 28.6.2023 ஆகிய கடிதங்களில் சொத்துவரி விதிக்க கோரி மதுரை மாநகராட்சிக்கு மனுக்கள் அனுப்பியும், மதுரை மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்ந்து நடவடிக்கை எடுத்து இருப்பது மதுரை மாநகராட்சி அலுவலர்கள் தங்கள் பணியில் மெத்தனமாக செயல்படுகிறார்கள் என்று இம்முறைமன்றம் சுட்டிகாட்ட விரும்புகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும் கணிபொறியால் ஏற்பட்டதாக கூறப்படும் inactive காரணமாக வரிவிதிப்பு செய்ய இயலவில்லை என்பது ஏற்புடையது அல்ல. ஒவ்வொரு ஆண்டும் வரிவிதிப்பு எண்கள் சரிபார்க்கும்போது விடுபட்ட வரிவிதிப்பு எண்கள் கொண்ட கட்டடங்களை உடனடியாக கள ஆய்வு செய்து சரிசெய்யப்படவேண்டியது களப் பணியாளர்களின் கடமையாகும். அதனை மதுரை மாநகராட்சி அலுவலர்கள் சரிவர செய்யவில்லை என்பது தெளிவாகிறது. இதற்கு மதுரை மாநகராட்சி அலுவலர்களின் அலட்சியமே காரணம் (dereliction of duty) என்று இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும் இதற்கு பொறுப்பான கள அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி உதவியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு inactive வரிவிதிப்பு எண்களை உடனடியாக சரிசெய்தும், இராஜன் மழலையர் தொடக்கப்பள்ளி மற்றும் நடனகோபால் நாயகி மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிக்கும் உரிய காலத்திலிருந்து உடனடியாக வரிவிதிப்பு செய்யுமாறும், மேலும் மதுரை மாநகராட்சியால் வரிவிதிப்பு செய்யாமல் இருக்கும் விடுபட்ட கட்டடங்களுக்கு உடனடியாக கள பணியாளர்களை கொண்டு ஆய்வுசெய்து அவற்றிக்கும் வரிவிதிக்கவும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 45 தினங்களுக்குள் அறிக்கை அளிக்கவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் கள ஆய்வு செய்து சொத்துவரி விதிக்காமல் விடுபட்ட கட்டடங்கள் குறித்து காலமுறை ஆய்வு கூட்டங்கள் நடத்தி வரிவிதிப்பினை அதிகரித்து மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பினை தடுக்கவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The explanations of the officials who appeared before this Forum are unconvincing and unsound for the following reasons:-

1. It appears that there is a substantial loss of revenue to the Corporation in the area due to unassessed and underassessed buildings. Additions to the existing structure have not been fully taken into account for property tax assessments. The Petitioner's allegation in this connection appears to be genuine and correct.

2. The failure to collect property tax for years together by the zonal officials due to "inactive status" of the software part of the operational system is wanton, deliberate, motivated besides absolutely unlawful and adverse to the revenue welfare of the Local Body, viz (The Madurai Corporation). The lethargy and sheer carelessness of the delinquent officials concerned are condemned.

3. Schools like Rajan Nursery & Primary School, Natana Gopala Nayagi Mandhir building, Natana Gopala Nayagi Matriculation school have not been levied property tax for many years by the Corporation authorities. This is

shocking, exposing the Corporation Zone's utter failure to ensure collection of property tax, a main source of income to the exchequor of the Corporation.

4. There is proven leadership failure in the zone in a vital area like Revenue mobilization to the Local Body.

Hence, the DMA is directed to plug the loopholes as pointed out by pulling up the Madurai Corporation Officials in strong terms as there is huge revenue loss due to the lethargy of the local corporation officials. The Commissioner Madurai Corporation is directed to order a survey of all unassessed and underassessed buildings in the respective zones on a campaign mode within a stipulated time line and ensure fair and full revenue to the Corporation's kitty.

The story of "Inactive status" should be exploded by strong measures as it seems to be a conspiracy to cheat the Corporation with the collusion and connivance of the Corporation officials themselves. A detailed action taken report should be sent to this Forum in the next 45 days. A copy of this order is being sent to the Government in MAWS for information.

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S.S. ஜெகதீஸ்,
   1-B, மஹால் 8வது தெரு, மதுரை – 627 001.
2. ஆணையாளர்,
   மதுரை மாநகராட்சி,
   தல்லாகுளம், மதுரை – 625 002.
3. உதவி ஆணையாளர், (ஆணையாளர் வழியாக)
   மண்டலம் - 4, மதுரை மாநகராட்சி, மதுரை.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
6. முதன்மைச் செயலாளர்,
   நகராட்சி நர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை
   தலைமைச் செயலகம், சென்னை -600 009.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்